சொல்லிக் கொடுக்கிறீர்கள்? எப்போதுமே தவறாகவே பேசுவது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பழக்கம். ஆகவே, இந்த முறையும் திசை திருப்புவதற்கு, நாங்கள் சரியான பதிலை சொல்லும்போது, நீங்கள் அதை திசை திருப்பப் பார்க்கிறீர்கள். (குறுக்கீடு) தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேயத்தோடு ஒரு தொகுதிக்கு 2 கோடி ரூபாய் என்று வழங்கிக் கொண்டிருப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய பெருந்தன்மையான எண்ணத்தோடு சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்புரிமையைத் தெரிந்துகொண்டு, பணி செய்ய வேண்டுமென்பதற்காக வழங்கிக் கொண்டிருக்கிற நிதி! இந்தக் குழந்தைகளின் கல்வி என்பது மிக, மிக முக்கியம். அந்த முக்கியத்துவத்தைக் கருதி, உங்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிற அத்தனை ஊர்களுக்கும் நீங்கள் கட்டடம் கட்டுவதற்கு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தங்களுடைய நிதியைத் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

ஆவணங்களைப் பாதுகாத்தல்

***31788—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஆவணக் காப்பகங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2013 அக்டோபர் 24

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஆவணக் காப்பகங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பாதுகாக்கும் முறை நடைமுறையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களது அரசு 2011-2012 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ.40 இலட்சமும், 2012-2013 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ.40 இலட்சமும் ஒதுக்கித் தந்து, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

முற்பகல் 10-35

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி, இந்தியாவில் முதன்மை மாநிலமாக இடம்பெறச் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓய்வில்லாமல் உழைத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, தமிழ்நாட்டில் ஆவணக் காப்பகம் 1909 இல் தொடங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையினையும் நவீனப்படுத்த, முன்னேற்றம் அடையச் செய்ய, ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள் என்பதை நான் அறிவேன். இக்காப்பகத்தில் பல்வேறு துறைகளின் ஆவணங்களும், மாவட்ட நீதிமன்ற ஆவணங்களும், தலைமைச் செயலகத்தின் 65 இலட்சம் ஆவணங்களும், வருவாய் வாரிய ஆவணங்களும் மற்றும் கி.பி. 1657 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆவணங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்காப்பகம் பழமையான, பாரம்பரியமிக்க, வரலாற்று ஆவணங்களைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து, எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டு செல்ல வழிவகை செய்கிறது. இது பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சி மையமாகவும் பயன்படுகிறது. எனவே, சென்னையைத்*

2013 அக்டோபர் 24]

தவிர, வேறு எங்கெங்கு ஆவணக் காப்பகங்கள் இயங்கி வருகின்றன என்பதையும், ஆவணங்களை எக்காலத்திற்கும் அழியாமல் பாதுகாப்பதற்கும் நவீன தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதற்கு, கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் ஆவணக் காப்பகங்களில் ஏற்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவணக் காப்பகங்கள் முறையாகச் செயல்பட்டு வருவதற்கும், இந்தியாவிலே இருக்கக்கூடிய அனைத்துக் காப்பகங்களிலே தமிழ்நாட்டின் ஆவணக் காப்பகத் துறை ஒரு முதன்மைத் துறையாக வர வேண்டுமென்பதற்கும் திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னையைத் தவிர, வேறு எந்தெந்த இடங்களில் ஆவணக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்று ஒரு வினாவை இங்கே எழுப்பியுள்ளார்கள். சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு எழும்பூரில் ஆவணக் காப்பகம் செயல்பட்டு வருகிறது. சென்னையைத் தவிர, கடலூர், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஆவணக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில், சென்னையில் நல்ல கட்டமைப்பு வசதியுடன் ஆவணக் காப்பகம் செயல்பட்டு வருகிறது. மாவட்டத் தலைநகரங்களைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் ஆவணக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் அனைத்து அரசு அலுவலகங்களும் குறிப்பாக, வட்டாட்சியர் அலுவலகம், பதிவுத் துறை போன்றவற்றிலும் ஆவணங்களைப் பாதுகாக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. இதுபோன்ற ஓர் ஆவணக் காப்பகம் திருநெல்வேலியில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

உலர் களம் அமைத்தல்

***6831—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சியில் உலர் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,